//அவசரம்// தேர்வுகள் உடனடி கவனம்//

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண். 3690 /ஆ4 /2021-2022, நாள் : 14.03.2022

பொருள்: தேர்வுகள் – 2021-2022-ஆம் கல்வியாண்டிற்கான மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – பள்ளி மாணாக்கர்களின் பெயர்ப்பட்டியலில் உள்ள திருத்தங்களை மேற்கொள்ள கூடுதலாக கால அவகாசம் வழங்குதல் – சார்பு.

பார்வை : சென்னை- 6. அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.0023896/ /எச்1/2021. நாள்: 08.12.2021, 17.12.2021, 08.03.2022 மற்றும் 14.03.2022.

#######

மே 2022, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப்பட்டியலில் உள்ள திருத்தங்களை மேற்கொள்ள, அரசுத் தேர்வுத் துறையால் பலமுறை வாய்ப்பளிக்கப்பட்டது. பெயர்ப்பட்டியல் தயாரிக்க போதுமான காலஅவகாசமும், திருத்தங்கள் மேற்கொள்ள பல வாய்ப்புகளும் அளிக்கப்பட்ட நிலையிலும் கூட, சில பள்ளிகளின் பெயர்ப்பட்டியல்களில் பிழைத்திருத்தம் முழுமையாக மேற்கொள்ளப்படவில்லை என்பது, தற்போது வரையிலும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்களைக் மேற்கொள்ளக்கோரி பல பள்ளிகளிலிருந்து தொலைபேசி, ஒருங்கிணைப்பாளர்கள் குழு (WhatsApp) மற்றும் இவ்வலுவலகத்தில் பெறப்படும் கடிதங்கள் வாயிலாக தெரிய வருகிறது.

எனவே, மாணவர்களின் நலன் கருதி, அனைத்து மேல்நிலைப் பள்ளிகளுக்கும், மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப்பட்டியலில் உள்ள திருத்தங்களை மேற்கொள்ள மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் 14.03.2022 பிற்பகல் முதல் 16.03.2022 வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று, தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள User ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி மே 2022, மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத் தேர்வுகளுக்கான பெயர்ப்பட்டியல்களில்

PTO

தேர்வர்களது தலைப்பெழுத்து, பெயர், தாய் / தந்தை / பாதுகாவலர் பெயர் (ஆங்கிலம் / தமிழ்) பிறந்த தேதி, புகைப்படம் மற்றும் மொழிப்பாடம் ஆகியவற்றில் திருத்தங்கள் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், +2 மாணவர்களது பயிற்று மொழியில் (Medium) திருத்தங்கள் இருப்பின் அவற்றினை உரிய கடிதம் மற்றும் இணைப்புகளுடன் 17.03.2022-க்குள் dgeh4sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

14/03/22

பெறுநர் :

அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் (மேல்நிலை)
வேலூர் மாவட்டம்.

நகல்-

மாவட்ட கல்வி அலுவலர்
வேலூர்.
(தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)